கையாலாகாத த.வெ.க. அரசைக் கண்டித்து

வேலூரில் தெற்கு மாவட்ட - மகளிர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அறிக்கை!



வேலூர், அக்.29-

த.வெ.க. அரசில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, குழந்தைகள் பாதுகாப்பின்மை, விசம் போல ஏறும் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தாததை கண்டித்து வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அவர்கள் தனது அறிக்கையின் வாயிலாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

தற்போது தமிழ் நாட்டில் முன் எப்போதும் இல்லாத அளவில் பெண்களுக்கு எதிராக பாலியல் குற்றங்கள் ஒவ்வொரு நாளும் நடந்த வண்ணம் உள்ளது.மேலும் குழந்தைகள் முதல் வயது முதிர்ந்த தாய்மார்கள் வரை, தங்கள் அணிந்திருக்கும் தங்க ஆபரணங்களை கொல்லை அடிப்பது மட்டுமில்லாமல் கடத்தி கொலை செய்து வீசுவது போன்ற மனிதாபிமானம் இன்றி நடக்கும் பாலியல் கொடுமைகள் மற்றும் வளர் இளம் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள், கடத்தல், கொலை, கொள்ளை ஆகிய எண்ணிலடங்கா குற்றங்கள் நடைப்பெற்று நாட்டு மக்களிடையே பெரும் பயத்தையும்,அச்சத்தையும் ஏற்படுத்தி வருகிறது.இதுமட்டுமின்றி ஒவ்வொரு குடும்பத்திலும் அன்றாடம் பயன்படுத்தும் அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் விலை,மளிகை பொருட்களின் விலை நாளுக்குநாள் தாறுமாறாக விண்ணைமுட்டும் அளவிற்கு உயர்ந்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

தமிழகத்தில் பல ஆண்டுகள் பொது தேர்தல்கள் மூலம் ஜனநாயகப்படி திமுக வெறிபெற்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி அன்றாடம் இல்லத்தரசிகள் பயன்படுத்தும் அத்தியாவசிய குடிமை பொருட்களின் விலையை கட்டுக்குள் வைத்து கட்டுப்படுத்தி மக்கள் போற்றும் நல்லரசாக சாதனைகள் பல படைத்த திமுக மகளிர் அணி 2026,அக்டோபர் 31 சனிக்கிழமை அன்று ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும் என்ற கழகத் தலைவர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க 2026,அக்டோபர் 31 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் நடைப்பெற உள்ளது.

எனவே வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.வுக்குட்பட்ட மாவட்ட மகளிர் துணை செயலாளர்,மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மற்றும் குடியாத்தம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், வேலூர் மாநகர மகளிர் அணி அமைப்பாளர் மற்றும் மேயர்,மாவட்ட, மாநகர மகளிர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், வட்ட, வார்டு, ஊர் கிளை மகளிர் அணி நிர்வாகிகள்,உள்ளாட்சி மன்ற முன்னாள் இன்னாள் நிர்வாகிகள் ஆகியோர்கள் திரளாக கலந்துகொண்டு மக்கள் விரோத தவெக அரசுக்கு மாபெரும் கண்டனத்தை தெரிவித்திட வாரீர் வாரீர் என வேலூர் தெற்கு மாவட்ட திமுக சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அவர்கள் தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில்

த.வெ.க. அரசைக் கண்டித்து மகளிரணி ஆர்ப்பாட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், அக்.29-

விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்களின் அறிக்கை வருமாறு:-

அமைதிப்பூங்காவாக திகழ்ந்த தமிழ்நாட்டை பாதுகாப்பற்ற மாநிலமாக சீரழித்து படுகுழியில் தள்ளிய துப்புக்கெட்ட த.வெ.க. அரசை கண்டித்து கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி , கழக இளைஞர் அணி செயலாளர் எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தல் படி, கழக துணைப் பொதுச்செயலாளர் முனைவர் க. பொன்முடி அவர்களின் வழிகாட்டுதல் படி , கழக துணைப் பொதுச்செயலாளர் திருமதி கனிமொழி எம்.பி அவர்களின் ஆலோசனைக்கிணங்க மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்களின் தலைமையில் விழுப்புரம் மாவட்ட மகளிர் அணி சார்பில் வரும் (31.10 .2026 சனிக்கிழமை) காலை 9 மணிக்கு விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சித் திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

மாநில மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் மோ. தென்மொழி , மாவட்ட துணைச் செயலாளர் இரா.கற்பகம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கா.அமுதா , மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் த.அருள்மொழி உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழக மகளிர் அணி , மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகளுடன் மாவட்ட கழக அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் அ.சிவா, மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன் உள்ளிட்ட மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொள்ள இருக்கும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்ட கழகத்தைச் சேர்ந்த மகளிர் அணி மகளிர் தொண்டர் அணியினருடன் கழகத் தோழர்களும் பெருந்திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கோவையில் சார் பதிவாளர் அலுவலகங்கள் முன்பு பத்திர எழுத்தர்கள் ஆர்ப்பாட்டம்!

கோவை, அக். 29 –

தமிழக பத்திர பதிவுத்துறையில் 578 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. இதில் 5 லட்சம் பத்திர எழுத்தர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். கடந்த 1865ம் ஆண்டு முதல் பத்திரப்பதிவு துறையில் எழுத்தர்கள் மூலம் பத்திரப்பதிவு எழுத்துப் பணிகள் நடைபெற்றன. தற்போதைய தவெக அரசு இதை தனியார் துறைக்கு மாற்றி வருகிறது. இடைத்தரகர் மூலம் தனியாருக்கு அழைப்பு அனுப்பப்படுகிறது. ஆன்லைன் மூலம் நடைபெறும் முறையில் ஆள்மாறாட்டம், போலி பத்திரம் பதிவு போன்ற பல தவறுகள் நடக்க வாய்ப்பு உள்ளன. மேலும் இதில் வாங்குபவர் மற்றும் கொடுப்பவர் பெயர்கள் மட்டுமே இடம் பெறுகின்றன. இதனால் முழு விவரமும் அதில் குறிப்பிடப் படுவதில்லை இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படும் நிலை உள்ளது. மேலும், இதை தனியாருக்கு மாற்றுவதால் 5 லட்சம் பத்திர எழுத்தர்கள் குடும்பங்கள் பாதிக்கும் அபாயம் உள்ளது. எனவே இதில் பழைய நடைமுறையே தொடர தமிழக முதல்வர் விஜய், பத்திர பதிவுத்துறை அமைச்சர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோவை ரெட் பீல்ட் அருகே உள்ள பீளமேடு சார் பதிவாளர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு பத்திர எழுத்தர்கள் சங்கம் சார்பில் பீளமேடு கிளை தலைவர் பார்த்திபகுமார் தலைமையில் செயலாளர் இளங்கோவன், பொருளாளர் சிவராம கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் கோஷம் எழுப்பினர். அப்போது பெண் ஊழியர்கள் தரையில் அமர்ந்து கோஷம் எழுப்பினர். பத்திர எழுத்தர்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் நிர்வாகிகள் பழனிச்சாமி, விஜய சந்திரன், சரஸ்வதி, பாக்கியலட்சுமி, செல்வராஜா, ராமதாஸ், சீனிவாசன், விஜய பாஸ்கர், அர்ஜுன், அரவிந்த், பிரேம், முத்துக்குமார், சண்முகம், வித்யா, அகிலா உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.


சூலூர் சார்பதிவாளர் அலுவலகங்களில் 25க்கும் மேற்பட்ட அரசு பதிவு பெற்ற பத்திர எழுத்தர்கள் உள்ளனர். இவர்களை சார்ந்தோர் சுமார் 175 பேர் பணி புரிகின்றனர். தமிழக அரசு கொண்டுவரக்கூடிய ஆன்லைன் பத்திரப்பதிவு முறையால் பத்திரப்பதிவை நம்பி உள்ள தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என தமிழ்நாடு பத்திர நகல் எழுதுவோர் சங்கத்தினர் சூலூர் சார்பதிவாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பத்திர நகல் எழுதுவோர் சங்கத்தினர் கலந்து கொண்டு கண்டனம் தெரிவித்தனர்.

அன்னூர்: கோவை மாவட்டம் அன்னூரில் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகம் முன்பு பத்திரப்பதிவு துறை சார்பில் மாதிரி பத்திரப்பதிவு மையம் துவங்க இடெண்டர் முறை மூலம் தனியார் மயமாக்க எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு பத்திரம் நகல் எழுதுவோர் சங்கம் சார்பில் கருப்பு பேட்ஜ் அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(27.10.2026)



1. சென்னை அடையாறு அருகே காவல் நிலையத்தில் நிபந்தனை கையெழுத்து போட்டுவிட்டு வீடு திரும்பிய ரவுடி பட்டப் பகலில் சரமாரியாக வெட்டிக் படுகொலை ....

2. தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே திட்டம்குளத்தில் காய்கறி மார்க்கெட்டில் உருவ கேலி செய்ததால் சக நண்பரை கோடாரியால் வெட்டி கொலை செய்த தொழிலாளி ...

3. விழுப்புரம் அருகே பிரபல ரவுடியை சரமாரியாக வெட்டிக் கொலை செய்த கும்பல்....



4. ஆவடியை அடுத்த திருமுல்லைவாயிலில் மது போதையில் தகராறு. அறிவாளால் சரமாரியாக வெட்டி வாலிபர் படுகொலை ...

5. விருதுநகர் அருகே அல்லம்பட்டி கிராமத்தில் தூங்கிக் கொண்டிருந்த கணவனை மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து எரித்துக் கொன்ற மனைவி ...

6. குமரி மாவட்டம் பத்மநாபபுரம் நீதிமன்றத்திற்கு விவகாரத்து வழக்கிற்காக ஆஜராக வந்த இளம் பெண்ணை அறிவாளால் சரமாரியாக வெட்டிய கணவன்....

7. திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு அருகே தரடப்பட்டு கிராமத்தில் பாட்டியின் பராமரிப்பில் இருந்த மூன்று சிறுமிகள் கடத்தல்..? கிராமத்தில் பரபரப்பு ...



8. சென்னை வியாசர்பாடியில் சவாரி வர மறுத்த ஆட்டோ டிரைவருக்கு சரமாரியாக கத்திக் குத்து...

9. சென்னை வடபழனியில் கட்டுமான நிறுவனம் மேற்பார்வையாளர் வீட்டில் பீரோவை உடைத்து 30 சவரன் நகை திருட்டு ....

10. சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் பயணிகளை குறி வைத்து தொடரும் செல்போன் திருட்டுக்கள், இரண்டு பேர் சிக்கினர் ...

11. சென்னை கொளத்தூரில் பிரசித்தி பெற்ற நாகாத்தம்மன் கோவிலின் உண்டியலை உடைத்து பணம் திருட்டு ...

12. சேலம் மாவட்டம் ஆட்டையாம்பட்டியில் வழிப்பறி திருடர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த சென்றபோது காவலர்களை தள்ளிவிட்டு தப்பிய இரண்டு கைதிகள் ....

13. சென்னை கொடுங்கையூரில் இருந்து அண்ணா சதுக்கம் செல்லும் மாநகரப் பேருந்தில் கொலை செய்ய வேண்டுமா என்னை தொடர்பு கொள்ளலாம் என்று செல்போன் எண்ணுடன் விளம்பரம் செய்த பிரபல ரவுடி சிக்கினான் ....



14. காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி த.வெ.க. நிர்வாகிகள் நியமனத்தில் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. தலையீட்டை கண்டித்து த.வெ.க. நிர்வாகிகள் வாலாஜாபாத்தில் சாலை மறியல் ...

15. ஆவடி மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் திடீர் மின்வெட்டு , கவுன்சிலர்கள், அதிகாரிகள் அதிர்ச்சி ...

16. தேனி சிறையில் இருந்து 17 கைதிகள் தப்பி ஓட்டம்.



தமிழ்நாடு முழுவதும் மோசமான சட்டம் ஒழுங்கு.

கைதிகள் தப்பிச் சென்றிருப்பது வெட்கக்கேடானது.

17. செஞ்சி சிறுமி மாயம் 16 நாட்களாகியும் துப்பு துலக்காத காவல்துறை.

சிறுமி குறித்து தகவல் ஏதும் கிடைக்காமல் திணறும் சி.பி.சி.ஐ.டி. போலீசார்.

குழந்தை மாயமாகி 2 வாரங்களுக்குப்பிறகு, சிறுமி குறித்து தகவல் தெரிந்தால் தெரிவிக்குமாறு விளம்பரம் வெளியிட்டுள்ளது சி.பி.சி.ஐ.டி.

18. கிருஷ்ணகிரி மாவட்டம் பெப்பாலப்பள்ளியில் கோவிந்தராஜ் என்பவரை அரிவாளால் வெட்டிவிட்டு மர்ம நபர்கள் தப்பி ஓட்டம்

அரிவாள் வெட்டில் படுகாயமடைந்த நபரை பொதுமக்கள் மீட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு மக்கள் அச்சம்.

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி விழா:

கழகத்தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அறிக்கை!



மதுரை, அக்.29-

மதுரை பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி விழாவில் பங்கேற்று அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வருகை தரும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது என்று மதுரை மாநகர மாவட்ட செயலாளர் கோ. தளபதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. மாவட்ட செயலாளர் கோ.தளபதி அறிக்கை வருமாறு!

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,தெய்வீகதிருமகனார் பசும்பொன்உ.முத்து ராமலிங்கத்தேவர்அவர்களின் ஜெயந்திமற்றும் குருபூஜை விழாவை முன்னிட்டு 29.10.2026 அன்று இரவு 8.15 மணிக்குமதுரைவிமானநிலையம் வரஉள்ளார்.

(30.10.2026 -வெள்ளிக்கிழமை)அன்று காலை 8.00 மணிக்குகோரிப்பாளையத்தில்உள்ளதிருஉருவசிலைக்குமாலைஅணிவித்துமரியாதை செய்ய உள்ளார். தெப்பக்குளம் மாமன்னர்கள் மருதுபாண்டியர்கள் திருஉருவசிலைக்குமாலை அணிவித்துமரியாதைசெய்யஉள்ளார். இன் நிகழ்ச்சிகளில் மாநில,மாவட்டகழகநிர்வாகிகள்,தலைமைசெயற்குழு,பொதுக்குழுஉறுப்பினர்கள்,பகுதிகழகசெயலாளர்கள்,வட்டகழகசெயலாளர்கள், நிர்வாகிகள், அணிஅமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள், மாமன்றஉறுப்பினர்கள், உடன்பிறப்புகள், கழக முன்னோடிகள் அனைவரும் பெரும் திரளாகக லந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மதுரைக்கு வருகைதரும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு

மதுரை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு!

மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. அறிக்கை!



மதுரை,அக். 28:

மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு. மணிமாறன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 30ஆம் தேதி பசும்பொன்னில் நடைபெறும் தேவர் திருமகனார் குருபூஜை பங்கேற்பதற்காகவும், மதுரை தெப்பக்குளத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்ட விடுதலைப் போராட்ட மாமன்னர்கள் மருதுபாண்டிய சகோதரர்களின் திருஉருவச்சலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தவும் உள்ளார்

சிறப்புமிக்க இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக சென்னையில் இருந்து விமான மூலம் மதுரைக்கு (29.10.2026-வியாழக் கிழமை) மாலை 7 மணிக்கு வருகை தர உள்ளார்

அது சமயம் மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் கழக நிர்வாகிகள், கழகத்தினர் கையில் இருவண்ண கொடியேந்தி உற்சாகத்துடன் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம் எல் ஏ கழகத்தினருக்கு தமது அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி -

மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!



கன்னியாகுமரி, அக்.29-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன் தலைமையில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெனஸ் மைக்கேல், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் லதா கலைவாணன் ஆகியோர் முன்னிலையில் (28.10.2026 - புதன்கிழமை) காலை 11.00 மணியளவில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு தலைமை கழக அறிவிப்பின்படி, தற்போது தமிழ்நாட்டில் நிலவும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்களுக்கு எதிரான வன்முறை, குழந்தைகளுக்கு பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வு ஆகிய வற்றை தடுக்க தவறிய ரீல்ஸ் த.வெ.க. அரசை கண்டித்து வருகிற (31.10.2026 - சனிக்கிழமை) அன்று கன்னியாகுமரி மாவட்ட தி.மு.க மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் நாகர்கோவில் மாநகராட்சி பொறுப்பு மேயர் ம.மேரி பிரின்சி லதா, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி தலைவர் வ. ஜெசிந்தா, துணை தலைவர் எல்.மவுண்ட் தேன் ரோஜா, துணை அமைப்பாளர் லதா, நாகர்கோவில் மாநகர மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ரோணிக்கம், த.வசந்தா, நாகர்கோவில் மாநகர மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மேரி ஜெனட் விஜிலா, தலைவர் எ.கத்தரினாள், துணை தலைவர் ப.பிரா மணக்கன்னி, துணை அமைப்பாளர்கள் விஜிலா ஜஸ்டஸ், ராணி உட்பட மாவட்ட, நாகர் கோவில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மகளிர் அணி & மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

தற்போதைய ரீல்ஸ் த.வெ.க. அரசால் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்களுக்கு எதிரான வன்முறை, குழந்தைகளுக்கு பாதுகாப் பின்மை மற்றும் விலைவாசி உயர்வு போன்றவற்றால் பொதுமக்கள் தினந்தோறும் அவதிப்படும் நிலைமையை உண்டாக்கிய த.வெ.க. அரசை கண்டித்து வருகிற 31.10.2026, சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு நாகர்கோவில், அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் வைத்து நடைபெற விருக்கின்ற மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற் குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், மகளிர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்வது என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.